அவர், "நான் உன்னை அங்கே உள்ளே சந்திப்பேன், இந்த முறை அது ஒரு வெளிப்படையான பொது காட்சியாக இருக்காது" என்றார்.

சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுதல், பிப்ரவரி 19, 1956

24. மேலும் கவனியுங்கள், அவர் எப்போதுமே வேதப்பிரகாரமாக இருக்கிறார். அவர், "'நீ ஜெபம் பண்ணும்போது, காண்பிக்கும்படியாக மாயக்காரர்கள் செய்வது போன்று ஜெபிக்க வேண்டாம். நீ இரகசிய அறை வீட்டிற்குள் பிரவேசித்து, நீ அவ்வாறு செய்யும் போது, கதவை அடைத்து, பிறகு அந்தரங் கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்' என்று நம்முடைய ஆண்டவர் சொல்ல வில்லையா" என்றார்.

மேலும் அவர், "நீ சொப்பனம் கண்ட அந்த நேரத்தைக் குறித்துத் தேடிக் கொண் டிருந்தாயே, அந்தப் பெயர் ஞாபகம் இருக் கிறதா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "ஆம்" என்றேன்.

அவர், “நான் உன்னை அங்கே உள்ளே சந்திப்பேன், இந்த முறை அது ஒரு வெளிப் படையான பொது காட்சியாக இருக்காது” என்றார். அப்போது தரிசனம் என்னை விட்ட கன்றது.

★★★★★

## செய்தி: ஒரு தரிசனம் என்பது என்ன?, ஏப்ரல் 8, 1956 பிற்பகல்

107. இப்பொழுது, இங்கே ஏதோவொரு காரியம் இருக்கிறது. கூர்ந்து கவனியுங்கள். கர்த்தருடைய தூதனானவருக்கும் அந்த ஒளிக்கும் இடையே வித்தியாசம் உண்டு. ஏனென்றால், இரவில், இங்கே மேடையில் அது வரும்போது, அது ஒருவிதத்தில், "வியூ! வியூ! வியூ!" என்பது போல, அது செய்வது போன்று, ஏதோவொன்று அசைந்து கொண்டிருப்பதை நான் கேட்டேன், மேலும் அக்கினி மிக வேகமாக சுழலுவது போன்று, வேகமாக வந்து தொடுகிற பற்றியெரியும் ஜூவாலையைப் (licking blaze) போன்று அது இருக்கிறது. அது என்னை விட்டு, அந்தக் கூட்டத்தினரின் (audience) மேலாக இறங்கி சென்று, அது போய், அந்தச் சிறிய கட்டிடத்தின் உச்சிக்கு மேலாக நின்று, பிறகு அதன்மேல் அமர்ந்தது. அப்போது, அது அவ்வாறு அமர்ந்த போது, எனக்கு அருகில், எனக்குப் பின்னால் நின்று கொண்டிந்த, இந்த ஒன்று, அந்த அதே

தூதனானவரின் சத்தமானது, அவர், “நான் உன்னை அங்கே உள்ளே சந்திப்பேன். இதுதான் மூன்றாம் இழுப்பு, ஆனால் அதைக் குறித்து யாருமே எதையும் அறிய மாட்டார்கள்” என்றார்.

அதற்கு நான், “நல்லது, எனக்கு இது புரியவில்லையே. ஏன் அங்கே உள்ளே? ஏன் அங்கே?” என்று கேட்டேன்.

அவர், “இந்நேரத்தில், அது ஒரு பொது காட்சியாக இருக்காது” என்றார்.

மேலும் நான், “அதைப் போன்ற அந்தச் சிறு தனியறைக்குள் போவது, எனக்குப் புரியவில்லையே” என்றேன்.

108. அதற்கு அவர், “‘நீ ஜெபம் பண்ணும் போது, மனுஷருக்கு முன்பாக கேட்கப்பட வேண்டுமேன்று விரும்பும் மாயக்காரர்களைப் போல இருக்க வேண்டாம். ஆனால் நீயோ இரகசிய அறைவீட்டிற்குள் பிரவேசித்து, அந்த ரங்கத்தில் பார்க்கிற பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற அவர் உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்’

என்று நம்முடைய ஆண்டவரால் எழுதப்பட்டிருக்கவில்லையா?" என்று கூறினார். அது பரிபூரணமாக வேதவாக்கியத்தின் பேரிலேயே உள்ளது. ஒவ்வொரு முறையும், அது அவ்வாறு தான் உள்ளது.

அதற்கு நான், "எனக்குப் புரிகிறது" என்றேன்.

109. அதன்பிறகு அவர் என்னை இந்த இடத்திற்கு எடுத்துச் சென்று, நான் இருந்த இடத்திலிருந்த இந்த அறைக்குள்ளே என்னை உட்கார வைத்தார். அப்போது மூன்றாம் முறையாக என்ன செய்ய வேண்டுமென்று அவர் என்னிடம் கூறினார். இப்பொழுது, கிறிஸ்தவ நண்பர்களே, அது இருக்கும், நான் இந்த உலகத்தை விட்டுப் போகும்போதும், அது இன்னுமாக என்னுடைய நெஞ்சிலேயே இருக்கும். நான்... ஆனால், என்ன சம்பவிக்கப் போகிறது என்ற என்னுடைய வார்த்தைகளை நீங்கள் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

★★★★★